பிற்பகல் 2—05

மேலும் எங்கள் மாவட்டத்தில் புயல், வெள்ளம், மழைக் காலங்களில் மிகவும் துன்பப்பட்டு பணிபுரியும் மின்சார ஊழியர் களுக்கு இன்னும் மேலும் பல விசேஷ சலுகைகளை அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன், எங்களுடைய மாவட்டத்தில் பொதுவான ஒரு முக்கியமான பிரச்சினை இருப்பதினால்—ஒரே ஒரு நிமிடம் தங்களுடைய அனுமதியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருப்ப தால் ஒரு நிமிடம் மட்டும் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். கடந்த கூட்டத் தொடரில் புதிதாக திருத்தப்பட்டு நிறைவேறிய சட்டத்தினால் எங்கள் மாவட்டத்தில் வீடுகள் கட்ட முடியாமல் பொதுமக்களும், கட்டிடத் தொழிலாளர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அரசு 30-9-1993 வரை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகளை கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆட்சேபணைகள் நமது அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தச் சட்டத்தை தயவுச்செய்து மறுபரிசீலனை செய்து, மக்கள் அங்கே வீடுகள் கட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு ஒரு நல்ல உத்தரவை இயற்றித்தருமாறு கே டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-10-1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

93. வேளாண்மைத்துறையின் 29—3—1976 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் I 2/AG/1950/76-ல் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18—6—1993 ஆம் நாளிட்ட 356 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடி கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

94. வேடசந்தூர் வட்டத்தில் சில கிராமங்களை பூதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 27—5—1993 நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளி

யிடப்பட்ட அறிக்கை [1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

95. உள்துறையின் 23—8—1989 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் II (2)HO/14795/89 நாள் 23—8—1989-ல் திருத்தம் ஒன்று செய்வது குறித்து, உள் (போ.) துறையின் 21—7—1993 ஆம் நாளிட்ட 1122 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீஆகோபில மடத்திற்கு சொந்தமான இ. டி. TN/45H–5454 மற்றும் TN 45F 5454 ஆகிய எண் கொண்ட இரண்டு வாகனங்கள் அறப்பணிக்காக பயன்படுத்தும்வரை 11—6—1993 முதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 11—6—1993 ஆம் நாளிட்ட 797 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ் நாடு இயக்கூர்த்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

97. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாக மற்றும் கம்பி வடத் தொலைக் காட்சி கோர்வையின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (சினிமா-2) துறையின் 28-6-1993 நாளிட்ட 935 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாக மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி கோர்வையின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது].

98. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்), விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, உள் (சி. II) துறையின், 9—7—1993 நாளிட்ட 1044 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

99. 1991-92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக்கழகத்தின் ஏழாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) (1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

100. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

101. தமிழ்நாடு சிட்டுக் கழகத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

102. 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956). 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

103. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956). 919-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

16. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1991-92 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை—ஆண்டு கணக்குகள் (தமிழ், ஆங்கிலம்).

17. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (11 பட்டியல்கள்) (ஒவ்வொரு பட்டியலும் வரிசை எண் 1 முதல் 100 வரை. 9ஆம் பட்டியலில் மட்டும் 1 முதல் 99 வரை.

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (7 பட்டியல்கள்) (ஒவ்வொரு பட்டியலும் வரிசை, எண் 1 முதல் 50 வரை.)